**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில்

ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 40(அ) மற்றும் 40(ஆ) பந்திகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் பின்னோக்கி மீளக் குறிப்பிடப்பட்ட போது தற்போதைய காலப்பகுதிக்கும் முன்னைய இரண்டு காலப்பகுதிகளுக்குமான மூன்று நிதி நிலைமைக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் முன்னைய காலப்பகுதிக்குரிய பிற்போடப்பட்ட வரிச் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் குறித்த சீராக்கங்கள் தொடர்பாக 2020, 2019 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் ஆரம்ப மீதிகளிற்கு மேற்கொள்ளப்பட்ட பிற்போடப்பட்ட வரி மீதிகளின் விளைவு குறிப்பு இலக்கம் 8.1 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது. மேலும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதியிலிருந்து காட்டப்பட்டது. ஐந்தொகையும் 2018 ஆம் ஆண்டின் இறுதி மீதியிலிருந்து காட்டப்பட்டது. அதன் பிரகாரம் நியமம் 01 இன் 40 அ, 40 ஆ பந்திகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் மீதிகள் வெளிப்படுத்தப்பட்டன. | நியம ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 81 (அ) பந்தியின் பிரகாரம் வரிக்குப் பின்னரான இலாபம் அல்லது நட்டம் தனித்தனியாக காட்டப்படும் வகையில் விரிவான வருமானக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏனைய விரிவான வருமானம் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. எதிர்கால கணக்குகளில் இதனை காட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நியம ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் 26(அ) பந்தியின் பிரகாரம் ஓய்வூதிய நலனிற்கான கடப்பாட்டின் கொண்டுசெல்லும் தொகைக்கும் அதன் வரி அடிப்படைக்கும் இடையே காணப்படுகின்ற தற்காலிக | ஓய்வூதிய நலன் கடப்பாட்டின் கொண்டுசெல்லும் தொகைக்கும் பிற்போடப்பட்ட வரி பொறுப்பாக அதன் வரி அடிப்படைக்கும் இடையே காணப்படுகின்ற தற்காலிக வேறுபாட்டின் விளைவைக் | நியம ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேறுபாடு பிற்போடப்பட்ட வரிச் சொத்தாக காணப்பட வேண்டிய போதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பிற்போடப்பட்ட வரி பட்டியல்களின் பிரகாரம் 2019 மற்றும் 2020 ஆண்டுகளின் இறுதியில் உள்ளவாறான முறையே ரூபா 65,079,965 மற்றும் ரூபா 79,018,332 ஓய்வூதிய நலன் பொறுப்பு தொடர்பாக பிற்போடப்பட்ட வரி பொறுப்பு இனங்காணப்பட்டிருந்தது. இதன் விளைவாக ஆண்டின் இறுதியில் உள்ளவாறான தேறிய வரிப் பொறுப்பு 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 130,159,930 மற்றும் ரூபா 158,036,664 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | கருத்தில் கொள்ளும் போது கணக்குகளில் காட்டப்படும் வரிப் பொறுப்பு, குறித்த தொகையால் குறைக்கப்பட்டு, அதே தொகையால் வரிச் சொத்து அதிகரிக்கப்படுகிறது. ஆகையால் கணக்காய்வு மூலம் சுட்டிக்காட்டப்பட்டவாறு 2019 மற்றும் 2020 ஆண்டுகளின் இறுதியில் உள்ளவாறான தேறிய வரி பொறுப்பு தொடர்பாக எந்தவொரு பாதிப்பும் ஏற்பட்டிருக்கவில்லை. | |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் 61(அ) பந்தியின் பிரகாரம் ஏனைய விரிவான வருமானமாக அங்கீகரிக்கப்பட்ட உருப்படிகளுடன் தொடர்புடைய பிற்போடப்பட்ட வரியின் பெறுமதி ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் காட்டப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டிற்கான ரூபா 61,720,242 உள்ளபடியான நட்டம் தொடர்பான ரூபா 17,281,668 தொகையான பிற்போடப்பட்ட வரி பெறுமதி ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மூலம் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களுடன் இணங்கப்பட்டுள்ளது. இது எதிர்கால கணக்குகளில் சீர்செய்யப்பட உள்ளது. | நியம ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் சிறிய மற்றும் நடுத்தரளவிலான நிறுவனங்களிற்கான கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது கணக்கீட்டு கொள்கைகள் இல. 3.1.1 இல் காட்டப்பட்டுள்ளது. | அவதானிப்பு சரியானதாகும். 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பின்பற்றப்படும் கொள்கை சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஓய்வூதிய நலன் கடப்பாடு ரூபா 282,412,178 ஆக காணப்பட்ட போதிலும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலின் பிரகாரம் இது ரூபா 282,208,329 ஆக காணப்பட்டது. ஆகையால் ரூபா 203,849 வேறுபாடு தொடர்பாக இனங்காணப்பட்டிருக்காத பிற்போடப்பட்ட வரியின் பெறுமதி ரூபா 57,078 ஆகும். | கணக்காய்வு மூலம் சுட்டிக்காட்டப்பட்ட வரி விடயத்துடன் இணங்கப்பபடுகிறது. ஆண்டின் இறுதியில் உள்ளவாறான தேறிய வரி பெறுமதி ரூபா 57,348.00 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | வரி கணிப்பீடு சரியாக செய்யப்பட்டு சரியாக கணக்குகளிற்கு முறையாக எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வான்கால கடன்பட்டோரிற்கான ஐயக்கடன் ஏற்பாடு ரூபா 4,214,919 ஆக இருக்க வேண்டிய போதிலும் இது நிதிக்கூற்றுக்களில் ரூபா 5,027,070 ஆக காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக, மீளாய்வாண்டிற்கான நட்டம் ரூபா 812,151 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கணிப்பீடுகள் சரியாக கணக்குகளில் காட்டப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்கான ரூபா 31,078,837 கிரயத்திலான கணனி மற்றும் உபபாகங்கள் மற்றும் ரூபா 1,521,908,873 பெறுமதியான transmitters என்பவற்றின் பெறுமானத்தேய்வு செலவினங்கள் ரூபா 8,789,591 ஆல் கணக்குகளில் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளன. | இது 2021 ஒக்தோபரில் சீர் செய்யப்பட்டது. | கணிப்பீடுகள் சரியாக கணக்குகளில் காட்டப்பட வேண்டும். |
| (ஈ) | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் தவணைதப்பிய வரியை அறவீடு செய்யும் பிரிவின் ஏடுகள் மற்றும் வரி கொடுப்பனவு தொடர்பான கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் என்பவற்றின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வரிப் பொறுப்பு ரூபா 204,824,632 (தண்டப்பணங்கள் இல்லாமல்) ஆக காணப்பட வேண்டிய போதிலும் இது நிதி நிலைமைக் கூற்றின் நிதியல்லா பொறுப்புகளின் கீழ் ரூபா 112,099,096 ஆக | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணிப்பீடுகள் சரியாக கணக்குகளில் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செலுத்த வேண்டிய வரியின் நிலுவைத் தொகை ரூபா 92,725,535 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (உ) | அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமானதும் பரிமாற்றல் (transmission) நிலையத்தை நடாத்துவதற்காக குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுமான 0.3194 ஹெக்டெயர் பரப்பளவிலான காணி தொடர்பான ரூபா 127,149,208 குத்தகை வாடகை கூட்டுமொத்தம் 1995 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலான வரி வாடகையை கொண்டிருந்ததுடன் குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவுக்கு சொந்தமான 119.5309 ஹெக்டெயர் பரப்பளவிலான காணிக்கான 2017 ஆம் ஆண்டுக்கான குத்தகை வாடகை கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு சரியானதாகும்.<br><br>குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவுக்கு சொந்தமான காணிக்கான குத்தகை வாடகையை நீக்குவது தொடர்பில் பொது திறைசேரியுடன் கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டு வருகின்றது. | ஆண்டுக்குரிய செலவினங்கள் சரியாக கணக்குகளிற்கு எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.5 இணக்கம் செய்யப்படாத கட்டப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தொகை | துணை ஏடுகளின் பிரகாரம் தொகை | வேறுபாடு | முகாமைத்தவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| பெறவேண்டிய வைப்புக்கள் | 9,762,842 | 9,343,162 | 419,680 | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். இம் மீதிகள் மிகவும் பழமையானதுடன் தற்போது இம் மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கான சட்ட நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மீதிகள் துணை ஏடுகளுடன் பொருந்த வேண்டும். |

### 1.5.6 அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

| அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல் விபரம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அறவீட்டு அடிப்படையில் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு சலுகை விலையில் பொருட்களை வழங்குவதற்காக செலவிடப்பட்ட ரூபா 248,514 தொகை மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்றுநோய் பரவியதன் விளைவாக நாடு பூட்டப்பட்டதன் காரணமாக பணம் செலுத்தி அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு கூட்டுத்தாபனத்தில் பணிக்கமர்த்தப்பட்ட ஊழியர்களை வசதிப்படுத்துவதற்காக முன்னாள் தலைவரின் அங்கீகாரம் வழங்கப்பட்டது. அவ்வாறு பெறப்பட்ட பணம் முறையாக செலுத்தப்பட்டு அனைத்து விலைப்பட்டியல்களும் தீர்ப்பனவு செய்யப்பட்டன. | உரிய பணம் அறவிடப்பட வேண்டும். |

### 1.5.7 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | காணிகள் | 7,574,763 | உரித்துறுதிகள், பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள், நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகள் | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | சொத்துக்களின் உரிமைத்துவம் மற்றும் இருக்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கட்டிடங்கள் | 430,110,257 | நிலையான சொத்துக்கள் பதிவேடு, பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் மற்றும் பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகள் | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | சொத்துக்களின் உரிமைத்துவம் மற்றும் இருக்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | வணிக கடன்பட்டோர் | 282,086,956 | மீதி உறுதிப்படுத்தல்கள், கோவை விபரங்கள் மற்றும் விபரமான பட்டியல்கள் | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | உரிய சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஈ) | செலவினம் | | 650,388 | அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் | 2021.12.14 இல் கணக்காய்வு பிரிவுக்கு அனுப்பப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் செலவினங்களை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | (i) | இலங்கை வங்கியின் 4 நடைமுறைக் கணக்குகளின் மீதிகள் | 1,802,445 | மீதி உறுதிப்படுத்தல்கள், வங்கி கூற்றுக்கள், விபரமான காசுப் புத்தகங்கள் | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு அத்தியட்சகருக்கு அனைத்து மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களையும் அனுப்புமாறு அனைத்து வங்கிக் கிளைகளுக்கும் 2021.01.05 இல் அறிவிக்கப்பட்டது. | மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| | (ii) | இலங்கை வங்கி மேலதிகப்பற்று | (52,000) | கந்துரட சேவையால் பேணப்படும் விபரமான காசுப் புத்தகம் | 2021.08.09 இல் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. | மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | முதலீடு | | 1,000,000 | பங்குச் சான்றிதழ்கள் | பங்குச் சான்றிதழ்களுக்காக கூட்டுத்தாபனத்தில் உள்ள ஏடுகள் சமர்ப்பிக்கப்பட்டன. | மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (எ) | நானாவித இருப்புக்கள் | | 21,632,280 | இருப்புக்களின் ஒவ்வொரு உருப்படிகளையும் பெறுமதிகளையும் குறிப்பிடுகின்ற விபரமான பட்டியல்கள் | கருத்துரை வழங்கப்படவில்லை. | இருப்பின் இருக்கும் தன்மை மற்றும் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு உரிய சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2 முதல் 20 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதிக்குள் முன்கொண்டு வரப்பட்ட ரூபா | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கப்பட்டது. | பெறவேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | 6,774,855 மீதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 20,508,760 தொகையான நானாவித கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் வெளி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 2,117,912 மீளளிக்கப்படாத தொகை குறித்த மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2 முதல் 8 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 10,635,965 தொகையான 7 பெறவேண்டிய வருமான மீதிகளை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டிலும் கூட்டுத்தாபனத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை | பெறவேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1981 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலான 39 ஆண்டு காலப்பகுதிக்கு மேலாக தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு செலுத்தப்பட வேண்டிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 149,420,035 கூட்டுமொத்த தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | அட்டுறு செலவினங்கள் நீண்ட காலம் நீடிக்கின்றமை தொடர்பான காரணங்களைக் கண்டறிந்து தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஹுன்னஸ்கிரிய மற்றும் திருகோணமலையில் ஒலிபரப்பு நிலையங்கள் நடாத்தப்பட்ட காணிகளுக்காக 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ரூபா 31,905,000 செலுத்த வேண்டிய குத்தகை வாடகையை | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | செலுத்த வேண்டிய செலவின மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| தீர்ப்பனவு செய்வதற்கு 2021 திசெம்பர் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**1.6.3 முற்பணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 9.1 ஆம் பிரிவின் மூலம் திருத்தப்பட்ட நி.பி. 371 (2) (ஆ) மற்றும் 371 (5) இன் பிரகாரம் பெறப்பட்ட கட்டுநிதி உரிய வேலை பூர்த்தியடைந்ததும் 10 நாட்களுக்குள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 1,016,027 கூட்டுமொத்தமான உப கட்டுநிதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 15 ஆண்டுகளை விஞ்சியிருந்த முற்பணத்திற்காக 2021 திசெம்பரில் நடவடிக்கைகள் சரியாக எடுக்கப்பட்டன. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2014 செப்தெம்பர் 17 ஆம் திகதிய எஸ்.எல்.பீ.சீ/3142 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பதவியணியினர் அறிவித்தல்களின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் பெறப்பட்ட முற்பணத்தை தீர்ப்பனவு செய்வதற்கு முன்னர் முற்பணங்கள் வழங்கப்படக்கூடாத போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 6,289,418 தொகை முற்பணங்களாக 24 உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. | தற்போது குறித்த நிலைமையை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | பொது நிதிகளை தவறாக பயன்படுத்தாமல் இருப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை**

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2015 ஒக்தோபர் 27 ஆம் திகதிய பிஃடி | உத்தியோகபூர்வ வாகனத்திற்கு உரித்துள்ள | கணக்காய்வு அவதானிப்புடன் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 01/2015(i) ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை | உத்தியோகத்தர் ஒருவரால் உத்தியோகபூர்வ வாகனம் அல்லது ரூபா 50,000 போக்குவரத்து படி மற்றும் சம்பந்தப்பட்ட பதவிக்கு உரித்தான மாதாந்த எரிபொருள் படியை பெற முடியுமான போதிலும் 2020 ஜனவரி 30 முதல் முன்னாள் தலைவருக்கு வாகனத்தை முன்பதிவு செய்ததன் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது மாதாந்த போக்குவரத்து மற்றும் எரிபொருள் படியாக முன்னாள் தலைவருக்கு ரூபா 659,610 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இணங்கப்பட்டுள்ளது. | பிரகாரம் நடவடிக்கைக ள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 அரச நிதிச் சுற்றறிக்கையின் II ஆம் பகுதியின் 6.2 ஆம் பிரிவு | பணி ஒதுக்கீட்டு அடிப்படையில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் போது சம்பந்தப்பட்ட சேவையை பெற்றுக்கொண்டதும் வரிசை அமைச்சு செயலாளரின் தனிப்பட்ட அங்கீகாரத்தின் பேரில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டின் போது 7 பெறுநர்களுக்கு ரூபா 3,519,117 தொகை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் பணி ஒதுக்கீடு பூர்த்தியடைவதற்கு முன்னர் செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைக ள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி 01/2015 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 3.2.1 ஆம் பந்தி மற்றும் 2020 சனவரி 27 ஆம் திகதிய பிஈடி 01/2020 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 1.2 | மாதாந்த எரிபொருள் படி போதுமானதாக இல்லாவிட்டால் பணிப்பாளர் சபையின் பரிந்துரையுடன் வரிசை அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டு பொது திறைசேரி செயலாளருக்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது அங்கீகாரம் பெறப்படாமல் 1011 லீற்றர் எரிபொருள் முன்னாள் | 2020 சனவரி 27 ஆம் திகதிய பிஈடி 01/2020 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் தலைவருக்கு உரித்துள்ள மாதாந்த எரிபொருள் படி 170 லீற்றர்கள் ஆகும். ஆகையால் இந்த அவதானிப்புடன் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைக ள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆம் பந்தி | தலைவருக்கு வழங்கப்பட்டிருந்தது. | இணங்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு (வரிக்கு முன்னரான) ரூபா 14,126,752 நட்டமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 25,505,571 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 11,378,819 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அரசாங்க மானியம் ரூபா 75,000,000 ஆல் அதிகரித்தமை இம் முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது விற்பனைகள் ரூபா 114,766,208 ஆல் குறைவடைந்ததன் காரணமாக ஆண்டுக்கான நட்டம் ரூபா 63,621,181 ஆல் அதிகரித்திருந்தது. நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 1996 ஆம் ஆண்டு முதல் கூட்டுத்தாபனம் நட்டமடைந்திருந்ததுடன் அரசாங்க மானியங்கள் பெறப்பட்ட போதிலும் குறிப்பிட்ட சில வருடங்களில் நட்டம் ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 75,000,000 தொகை முன்னைய ஆண்டுக்காக பெறப்பட்ட மானியத்தை விட அதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் இது முன்னைய ஆண்டை விட 20.55 சதவீதத்தால் அரசாங்க மானியம் அதிகரித்துள்ளதை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. அதற்கிணங்க திறைசேரியின் நிதி உதவியோ அல்லது அரசாங்க நிதி உதவியோ இன்றி கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை நிச்சயமற்றதாகவே காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள் மற்றும் நிர்வாகச் செலவினங்கள் முறையே 3.33 சதவீதம் அல்லது ரூபா 11,970,192 மற்றும் 8.08 சதவீதம் அல்லது ரூபா 31,708,704 ஆல் அதிகரித்திருந்தன.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் என்பன குறைவடைந்தமை காட்டப்பட்டுள்ளதுடன் 2 முதல் 45 ஆண்டுகள் பழமையான ரூபா 50,491,280 தொகையான உள்ளூர் கடன்பட்டோர் மீதிகள் மற்றும் ரூபா 62,971,953 தொகையான வெளிநாட்டு கடன்பட்டோர் மீதிகள் நடைமுறை சொத்துக்களில் உள்ளடக்கப்பட்ட கடன்பட்டோரில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மொத்தலாப விகிதம் 2.31 சதவீதத்திலிருந்து 1.37 சதவீதமாகக் குறைவடைந்துள்ளதுடன் விற்பனை வருமானம் ரூபா 114,766,208 ஆல் குறைவடைந்தமை குறித்த வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செயற்பாட்டு இலாப விகிதம் 58.56 இலிருந்து 82.21 ஆகக் குறைவடைந்துள்ளதுடன் வருமானம் குறைவடைந்தமை, ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள் மற்றும் விநியோகச் செலவினங்கள் அதிகரித்தமை என்பன குறித்த வீழ்ச்சிக்கு பங்களித்திருந்தன. இவ்வாறு நட்டம் ஏற்பட்டதன் விளைவாக மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு மற்றும் ஏனைய செலவினங்களுக்காக திறைசேரியிலிருந்து ரூபா 440,000,000 நிதியேற்பாடு பெறப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| செலுத்த வேண்டிய ரூபா 4,045,399 செலவினங்கள் உரிய திகதியில் செலுத்தப்பட்டிருக்காததன் விளைவாக மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தால் ரூபா 30,902 தண்டப்பணம் செலுத்தப்பட வேண்டியிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகளை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | உரிய திகதியில் செலவினங்களிற்காக செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| லங்கா புவத்தின் பங்குகளை கொள்வனவு செய்வதற்காக வெகுஜன ஊடக அமைச்சினால் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பேரில் 1993 ஆம் ஆண்டு கூட்டுத்தாபனத்தினால் ரூபா 1,000,000 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் 2020 ஆம் ஆண்டு வரை பங்குலாப வருமானம் எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | முதலீடுகளைப் பார்த்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | ரூபா 4,605,256 இற்கு உடனடியாக பழுதுபார்க்கப்பட வேண்டிய தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள ஒலிபரப்புக் கோபுரம் மற்றும் மைக்ரோவேவ் கோபுரம் என்பவற்றை பழுதுபார்ப்பதற்காக 2019 நவம்பர் 6 இல் பெறுகைக் குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2021 பெப்ரவரி வரையிலும் உரிய வேலை தொடங்கப்பட்டிருக்கவில்லை. | புதிய விலைக்கான நிதியேற்பாடுகள் கிடைக்காததால் உரிய செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. | நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டியின் 4.2.1(ஈ) பிரிவின் பிரகாரம் விபரமான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் | 2020 ஆம் ஆண்டில் பொது திறைசேரியால் வழங்கப்பட்ட நிதியேற்பாடு சில மடங்குகளால் குறைக்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்பட்ட பெறுகை திட்டத்தின் பிரகாரம் 18 பெறுகை நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது குறித்த திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளில் ஒரு பெறுகை நடவடிக்கையை மாத்திரமேனும் பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | அதற்கிணங்க நடவடிக்கைகளிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டன. 2020 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட பின்வரும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டன.<br><br>யாழ்ப்பாண அலைவரிசைக்கு 02 டிரான்ஸ்மிட்டர்களை (transmitters) கொள்வனவு செய்தல், ஏனைய ஒலிபரப்பு நிலையங்களுக்கான உதிரிப்பாகங்கள் மற்றும் உபபாகங்களை கொள்வனவு செய்தல், புத்தளம் மற்றும் கரபேவத்தை ஒலிபரப்பு நிலையக் காணிகளுக்கு இடையில் வேலி அமைத்தல். |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் 35 பதவிகளில் 371 வெற்றிடங்களும், 42 பதவிகளில் 364 மேலதிகங்களும் காணப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்பட்டிருக்காத 102 பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையை விட அதிகமாக 6 சந்தர்ப்பங்களில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மேலதிக ஊழியர்களின் எண்ணிக்கை 35 ஆகும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரிற்கு மாத்திரமே ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.5 வாகன தொகுதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 செப்தெம்பர் 09 இல் கைதவிர்ப்பு செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்ட கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ஆறு வாகனங்கள் கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் விளைவற்றிருந்தன. | புதிய தலைவர் பொருளாதார ரீதியாக பயனுள்ளதாக இருந்தால் இரண்டு வாகனங்களுக்கான மதிப்பீடுகளை கோரி பழுதுபார்ப்பதற்கு பரிந்துரைத்திருந்தார். | கைதவிர்ப்பு செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்ட வாகனங்களை தாமதமின்றி அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**4.1 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் 2021 நவம்பர் வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் 2021 ஆம் ஆண்டிற்கான வரைவு வருடாந்த அறிக்கை 2021 திசெம்பர் 31 வரையிலும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | காலதாமதமின்றி ஆண்டறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |